திருநீறு இறைவன் வடிவம். அளவற்ற பெருமை உடையது. வேதாகமங்களாலும் முனிவர்களாலும், நாயன்மார்களாலும் பெரியோர்களாலும் பாராட்டப் பெற்றது. திருஞானசம்பந்தர் திருநீற்றைப் பூசி பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தார். இதை அணிந்தே எந்த நற்செயல்களையும் செய்யத் துவங்கவேண்டும். முற்றும் துறந்த முனிவர்களும் திருநீறணிதல் மரபு. இது அணிவோரைப் புனிதப்படுத்துகிறது. உடற்துன்பம் போக்கித் தன்னை அணிபவர்க்குப் பெருமை தரவல்லது. பெருந்தவத்தோர்களது ஆசையறுப்பது. வேதத்தில் ஓதப்பெற்றுள்ளது. ஞானமும் முத்தியும் தரவல்லது. இறப்பென்னும் துயர் துடைத்து இருமையின்பம் தரவல்லது. இதைப் பூசுவதால் கடுங்காய்ச்சல் முதலிய நோய்கள் நீங்கும். அறிவு பெருகும், சாந்தம் மிகும், இன்பமுண்டாகும். முடிவில் முக்திப் பேரின்பமும் கிடைக்கும்.

அணியும் முறை

திருநீறைப் பெறும்போது, ஒன்றன்மீது ஒன்றுக வலக்கையை மேல் வைத்து, மகிழ்வுடன் இரு கையாலும், ஏந்திப்பெற வேண்டும் ஒரு கை நீட்டிப்பெறுவது தகாது. சிறிதும் சிந்தாதபடி அணிய வேண்டும்.

பொடியாக உடல் முழுவதும் பூசும் முறை உத்தூளன முறை. குழைத்து மூன்று குறிகளாக அணிவது திரிபுண்டர முறை அணியுமேபாது சில நாமத்தை உச்சரிக்க வேண்டும்.

அணியும் இடங்கள்

ஐந்து—நெற்றி, இரு தோள்கள், நெஞ்சு, கொப்பூழ்

எட்டு—தலை, நெற்றி, இரு காதுகள், இரு தோள்கள், மார்பு, கொப்பூழ்

திருநீறு எப்பேதும் நெற்றியில் இருக்கவேண்டும். கடவுள் சந்நிதி, ஓமத்தீ, குருவின் முன்னிலை ஆகிய இடங்களில் திருநீற்றைப் பெற்று அங்கேயே நின்று தரித்துக் கொள்ளாமல் சற்று தள்ளி நின்று திரும்பித் தரித்துக் கொள்ளவேண்டும்.

வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிலத்தில் சிந்தாதபடி, மேல் நிமிர்ந்து சிவசிவ என்று சொல்லி வலக்கை நடு விரல் மூன்றினாலும் எடுத்து நெற்றியில் தரித்தல் வேண்டும், இருகை நீட்டிப் பெறவேண்டும், நடந்து கொண்டு தரிக்கலாகாது.

எனவே திருநீற்றின் பெருமையை உணர்ந்து, அதைத் தரித்து வாழ்வில் உய்யும் வழியை மேற்கொள்ளவேண்டும்.

ஓம் - நம சிவாய

Koviloor Digital Library

துண்டி கணபதி

பரணீதரன்

காசியில் நிறைய ஆஞ்சநேய மூர்த்திகள் உள்ளதுபோல் கணபதி சிலைகளும் காணப்படுகின்றன. விச்வநாதர் கோயிலுக்குச் செல்லும் 'விசுவநாதர் கல்வி' என்னும் குறுகிய சந்தில் இடப்புறம் ஒரு பெரிய விநாயகர் சந்நியிருக்கிறது. அவருக்கு 'சாட்சி கணபதி' என்று பெயர். விச்வேச்வரரை தரிசிக்க வருபவர்களையெல்லாம் சாட்சியாக இருந்து கவனித்து வைத்துக் கொண்டு அவர் ஆசி வழங்குகிறார்.

ஸ்ரீ அன்னபூரணி கோயிலுக்கும் விச்வநாதர் கோயிலுக்கும் செல்ல 'பாஸ் பாடக்' என்ற மற்றொரு வழியிருக்கிறது. 'பாஸ் பாடக்' என்றால் 'மூங்கில் கேட்' என்று பொருள். அந்த வழியே செல்லும்போது நாம் துண்டி கணபதியைத் தரிசிக்காமல் போக முடியாது. பார்ப்பதற்குக் குழந்தை மாதிரி மிகவும் அழகாக இருக்கிறார் அவர். கண்களில் ஜீவகளை ததும்பி வழிகிறது.

காசி புராணத்தில் கூறப்படும் துண்டி ராஜா இவர்தான் பக்தர்களை தேடிக் கண்டு பிடித்து, அருளாசி வழங்குவதால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதாம்.

காசியை விட்டுப் புறப்படுவதற்கு முன் ஸ்ரீ ராஜேச்வர சாஸ்திரிகள் திரவிட், என்ற மகாவித்வானைத் தரிசித்து, நமஸ்காரம், செய்யும் பெரும் பாக்கியம் பெற்றேன். நான் அவருக்கு எண்பது வயது இருக்கும். பழுத்த பழமாய் அறிவின் சுடராய்ப் பிரகாசிக்கிறார், சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ள அந்த வேத விற்பன்னர் காசி மன்னருக்கு வித்யா குருவாக இருக்கும் பெருமை பெற்றவர். (அவர் 5-3-1977 அன்று ஸ்ரீ விச்வநாதர் திருவடி சேர்ந்து விட்டார்).

அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது காசி துண்டி கணபதியைப் பற்றி அறிந்து கொண்டேன்.

முன்பு ஒரு சமயம் சந்திர வம்சத்தில் தோன்றிய தர்மன் என்ற அரசன் பகைவர்களால் தோற்கடிக்கப்பட்டான். பின்னர் அவர்களிடம் சிக்கிக் கொள்ள மனமில்லாமல் காட்டிற்கு ஓடி விட்டான். அங்கிருந்த மகரிஷிகளிடம் தன் நிலைமையை எடுத்துரைத்து தனது ராஜ்யம் திரும்பத் தனக்கு கிடைக்க என்ன வழி என்று கேட்டான், அவர்களோ காசி துண்டி விநாயகரைத் தோத்திரம் செய்யும்படி கூறினர். அரசனும் அவ்வாறே செய்து. இழந்த தனது ராஜ்யத்தை மீண்டும் பெற்றான். இந்தக கதை காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ளதாம்.

காசிக்கு வருபவர்கள் துண்டி விநாயகரைத் தரிசிக்காமல் போகக் கூடாது. சகல சம்பத்துக்களையும் அளிக்கவல்ல வரப்பிரசாதி இவர்.

காசி அனுமான்—காட்டிலுள்ள எஸ் ராமா தீட்சிதர் துண்டி கணபதியின் மகிமையைப் பற்றி எழுதியிருக்கும் ஒரு கட்டுரையை அண்மையில் படிக்க நேர்ந்தது. ஸ்காந்த புராணத்தில் உள்ள காசி காண்டத்தில் காணப்படும் இந்த விநாயகரைப் பற்றிய தோத்திரத்தை அதில் வெளியிட்டிருக்கிறார். இது பரமேச்வரனே செய்ததாம். இதற்கு 'சர்வ சம்பத்கரம்' என்று பெயர். ஒவ்வொருவரும் விநாயகரை அருகம் புல்லாம் அர்ச்சித்து

Koviloor Digital Library

இந்த டுண்டி விநாயகர் தோத்திரத்தைப் பாராயணம் செய்து வந்தால் சகல விருப்பங்களும நிறைவேறுமாம்.

திருபுராசுர சம்ஹாரத்தின்போது விக்னம் ஏற்பட்டதால் பரமேஸ்வரன் இந்த விநாயக தோத்திரத்தை செய்து, திரிபுராசுரர்களை வெற்றி கண்டார். தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்தது, இவராலேதான். இந்திரன், விருத்தாசுரனைத் தோற்கடிக்கும் வலிமையை பெற்றதும் இவரது அருளாலே, டுண்டி விநாயகரின ஆசியைப் பெற்ற பிறகுதான் ராமருக்கு சீதை கிடைத்தாள்.

எத்தனை சிறிய மூர்த்திர்க்கு எத்தனை பெரிய கீர்த்தி,

நன்றி: ஸ்ரீ வரஸித்தி விநாயகர் மலர்
பெசண்ட் நகர் - சென்னை

விநாயக புராணம்

"அகரமென அறிவாகி உலத மெங்கும்
அமர்ந்தகர உகர மகரங்கள் தம்மால்
பகரு மொரு மூதலாகி வேறுமாகிப்
பலவேறு நீருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரில் மறக் கருணை புரிந் தாண்டு கொள்ளும்
திருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்"

(கச்சியப்ப முனிவர்)

Koviloor Digital Library

டுண்டி விநாயகர் துதி

(கந்த புராணம் காசி காண்டத்தில் உள்ளபடி)

ஸ்ரீகண்ட உவாச

1. ஜய விக்னகிருத மாத்ய பக்த நிர்விக்னகாரக
அவிக்ன விக்னசமன மஹாவிக்நேக விக்னருத்.

2. ஜயஸர்வகணேதீச ஜயஸர்வகணேக்ரீணீ :
கணப்ரணதபாதாப்ஜ கணநாதி தஸத்குண.

3. ஜயஸர்வகஸர்வேச ஸர்வபுத்யேகசேவதே
ஸர்வமாயாப்ரஞ்சக்ஞ ஸர்வகர்மாக்ர பூஜித.

4. ஸர்வமங்களமாங்கல்ய ஜயத்வம் ஸர்வ மங்கள
அமங்களோபசமன மஹாமங்களஹேதுக.

5. ஜய ஸ்ருஷ்டி க்ருதாம் வந்த்ய ஜயஸ்திதிக்ருதாநத
ஜய ஸம்ஹ்ருதிக்ருத் ஸ்துத்ய ஜயத் ஸத்கர்ம ஸித்தித.

6. ஸித்த வந்த்யபதாம்போஜ ஜய ஸித்திவிநாயக
ஸர்வஸித்தியேகநிலய மஹாஸித்யிருத்திஸேக.

7. அசேஷ குணநிர்மாண குணேச குணேச்வரணீ :
பரிபூர்ண சரித்ரார்த்த ஜயத்வம் குணவர்ணித.

8. ஜயஸர்வபலாதீச பலாராதி பலப்ரத
பலாகோஜ்வல தந்தாக்ர பாலபால பராக்ரம.

9. அனந்த மஹிமாதார தராதர விதாரண
தந்தாக்ரப்ரோததிங்நாக ஜயநாயக விபூஷண.

10. அன்வேஷணேடுடிரயம்ப்ரதிதோஸ்தி தாது :
ஸர்வார்த்தடுண்டிததயா தவ டுண்டிநாம.
காசீப்ரவேச மபிகோலபதேத்ரவதேஹி
தோஷம்விநாதவ விநாயகடுண்டிராஜ.

ஈச்வர உவாச

11. இமாம்ஸ்துநீம்மமக்ருதிம் ய: படிஷ்யதி ஸந்மதி :
நஜாதுதம்விக்னேகா | பீடயிஷ்யந்தி நிச்சிதம்.

12. டொளண்டீம்ஸ் துதிமிமாம்புண்யாம்ய , படேத்டுண்டி
ஸன்னிதௌ
ஸான்னித்யம் தஸ்யஸததம் பஜேயு : ஸர்வ ஸித்தய :

13. இமாம்ஸ்துகிம் நரோஜப்த்வா பரம் நியதமானஸ :
மானஸைரபிபான பஸ்தை : நாபிபூயேதகர்ஹிசித்.

14. புத்ரான் கலத்ரம் க்ஷேத்ராணி வராச்வான் வரமந்தீரம்
ப்ராப்நுயாச்சதனம்தான்யம் டுண்டி ஸ்தோத்ரம் ஜபந்நர :

15. ஸர்வ ஸம்பத்கரம்நாம ஸ்தோத்ரமேதன்மயேரிதம்
ப்ரஜப்த்வ்யம் ப்ரயத்நேன முக்திகாமேந ஸர்வதா.

16. ஜப்தவாஸ்தோத்ரமிதம்புண்யம் க்வாபிகார்யே கமிஷ்யத;
பும்ஸ: புர; ஸமேஷ்யந்தி நியதம் ஸர்வஸித்தய:

Koviloor Digital Library

கல்வி தரும் விநாயகர்

கி. வா. ஜகந்நாதன்

இறைவனுக்கு வடிவமும் குணமும் பெயரும் இயல்பாக இல்லை; என்றாலும் வடிவம், குணம், பெயர் முதலியவற்றைக் கொண்டு வாழும் உயிர்களுக்கு அருள் புரிவதற்காக அவன் பல்வேறு வடிவங்களையும், பெயர்களையும் மேற்கொள்ளுகின்றான். ஒவ்வொரு வடிவத்திலும் ஒவ்வொரு சிறப்பான பண்பு அமைந்திருக்கும். அழகே சிறப்பாக அமைந்த வடிவங்களும், வீரம் சிறப்பாக அமைந்த மூர்த்திகளும், சாந்தம் சிறப்பாக அமைந்த திருவுருவங்களும். இப்படியே வெவ்வேறு சிறப்புக்கள் அமைந்த வடிவங்களும் பலப்பல எந்த வடிவத்தில் கடவுளை வழிபட்டாலும் அவனுடைய அருள் கிடைக்கும். கங்கையில் எந்தத் துறையில் இறங்கி நீராடினாலும் தூய்மை உண்டாவது போல, இறைவனை எந்த வடிவில் வணங்கி வழிபட்டுத் தியானித்தாலும் நமக்கு இன்பம் உண்டாகும்.

இறைவன் மேற் கொண்ட பல வடிவங்களுள் விநாயகப் பெருமானுடைய திருவுருவம் ஒன்று. விநாயகர் என்ற திருநாமத்திற்கு எல்லோரினும் மேலான தலைவன் என்பது பொருள். அப்பெருமானுக்கு விச்னேசுவரர் என்றும் ஒரு திருநாமம் உண்டு. தடைகளுக்குத் தலைவன் என்பது அதன் பொருள். நம்மை வழிபடாதவர்களுக்குத் தடைகளை ஆக்கியும், வழிபடுகிறவர்களுக்குத் தடைகளைப் போக்கியும் அருள் பாலிப்பவர் அவர். கல்வி பயில்வார்க்கும் 'திருமணம் புரிவாருக்கும் துணை நின்று உதவும் பெருமான் அவர். "கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ" என்று அருணகிரிநாதர் பாடுவார்:

கல்வி வளர்ச்சியை விநாயகப் பெருமானின் திருவருளால் நன்றாகப் பெறலாம். ஞானத்தை வழங்கும் வள்ளல் அவர். திருமூலர், "ஞானக் கொழுந்தினை" என்று சொல்லுவார்.

விநாயகப் பெருமானுடைய திருவருளால் கல்வியில் சிறந்து நின்றவர்கள் பலர். அவர்களுள் ஔவையார் தலைசிறந்தவர். விநாயகப் பெருமானை வேண்டி மூன்று தமிழும் முற்றக் கற்றவர். "எம்பெருமானே, நான் உனக்குப் பாலும் தேனும் பாகும் பருப்பும் ஆக நான்கு பொருள்களும் தருகிறேன்; நீ எனக்கு மூன்று தமிழையும் அருள வேண்டும்" என்று விநாயகப் பெருமானை வேண்டிக்கொண்டார் அவர்.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா"

Koviloor Digital Library

ஔவையார் சாதுரியமாகப் பாடுகின்றார். "நான் உனக்கு ஒரு பொருள் கூடுதலாக நான்கு தருகின்றேன். நீ மூன்று தந்தால் போதும்" என்று சமற்காரமாகச் சொல்கின்றார்.

ஒரு சமயம் ஔவையார் சேர மன்னருடைய தலைநகராகிய வஞ்சி மாநகர் சென்றிருந்தார். அப்போது சேரமான் பெருமாள் நாயனார் அரசாட்சி புரிந்து கொண்டிருந்தார். ஔவையார் சென்ற சமயத்தில் அங்கே சுந்தரமூர்த்தி நாயனாரும் வந்திருந்தார்.

ஒருநாள் காலையில் ஔவைப் பிராட்டியார் விநாயகப் பெருமானுக்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்போது சுந்தரமூர்த்தி நாயனார் வஞ்சி மாநகரத்தில் உள்ள சிவபெருமான் திருக்கோவிலுக்குச் சென்றிருந்தார். இப்போது திருவஞ்சைக்களம் என்று அவ்விடத்தை வழங்குகின்றார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் இந்த உலகத்தில் திரு அவதாரம் செய்து, செய்ய வேண்டிய சேவைகளை எல்லாம் நிறைவேற்றி விட்டார். சிவபெருமான் அவரை மீட்டும் கயிலாயத்திற்கு வரும்படி செய்யத் திருவுளம் கொண்டார். கயிலாயத்திலிருந்து சுந்தரமூர்த்தி நாயனாரை அழைத்து வரும்படி திருவஞ்சைக்களத்திற்கு அனுப்பினான் தந்தியைக் கண்டவுடன் சுந்தரமூர்த்தி நாயனார் கயிலையை நோக்கிப் புறப்பட்டுவிட்டார். இந்தச் செய்தியை அறிந்த சேரமான் பெருமான் நாயனார் தம்முடைய குதிரையின்மீது ஏறி அதன் காதில் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். அது அவரை ஏற்றிக் கொண்டு வானவழியே திருக்கயிலையை நோக்கிப் புறப்பட்டுவிட்டது. இந்தச் செய்தியை அறிந்தார் ஔவைப் பிராட்டியார்

அவருக்கும் கயிலாயத்திற்குப் போகவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஆகவே, அவசர அவசரமாகப் பூஜையை முடிக்கத் தொடங்கினார். அப்போது விநாயகப் பெருமான் அசரீரியாக, "நீ நிதானமாக பூஜை செய் உன்னைக் கயிலாயத்திற்கு நான் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்" என்று அருளினார். அதனால் ஊக்கம் பெற்ற தமிழ் மூதாட்டியார் மெல்ல விரிவான முறையில் கணபதியைப் பூஜித்தார். பிறகு, சீதக்களபச் செந்தாமரைப்பூ பாதச் சிலம்பு பல இசைபாட" என்று தொடங்கும் விநாயகர் அகவலைப் பாடி முடித்தார். அப்போது விநாயகப் பெருமான் தம்முடைய துதிக்கையில் அந்தப் புலமைப் பிராட்டியாரை எடுத்த ஒரு கணத்தில் கயிலையில் விட்டார்.

கயிலாயத்தில், சிவபெருமான் திருக்கோயில் வாயிலில் ஔவையார் நின்றார். சுந்தரமூர்த்தி நாயனார் பிறகே யானையில் வந்தார். அவர் சிவபெருமானைச் சென்றடையும் மீதூர்ந்த ஆர்வத்தால் இந்த மூதாட்டியாரைக் கவனிக்கவில்லை. அவருக்குப் பிறகு குதிரையின் மேல் சேரமான் பெருமாள் நாயனார் வந்தார். அவர் ஔவையாரைக்கண்டு பெருவியப்பை அடைந்து, "நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்"? என்று கேட்டார். விநாயகப் பெருமானை நான் துதிக்கையிலே அவர் தம் துதிக்கையிலே கொண்டுவந்து விட்டார் என்று சொல்லி ஒரு பாடலைப் பாடினார்.

"மதுர மொழி நல் உமையவன் மைந்தன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தாமுகில் போல்முழங்கி
அதிர நடந்து வரும் யானையும் அதன் பின்னர்தம்
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே"

விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பெற்றவர்கள் நம்பியாண்டார் நம்பி ஒருவர். மறைந்திருந்த தேவாரப் பதிகங்களை விநாயகப் பெருமான் திருவருளால் வெளிப்படுத்தியவர் அந்தப் பெரியார்.

Koviloor Digital Library

திருநாரையூர் என்ற தலத்தில் பொல்லாப் பிள்ளையார் என்ற திருநாமத்தோடு விநாயகப் பெருமான் திருக்கோயில் கொண்டுள்ளார். அக்கோவிலில் பூஜை செய்யும் சிவாசாரியன் ஒருநாள் வெளியூருக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது தம் மூடைய சிறிய மகனிடம் "நீ கோவிலுக்குச் சென்று விநாயகருக்குப் பூஜை செய்து விட்டு வா' என்று சொல்லிவிட்டுப் போனார். அந்தச் சிறுவர் அதன்படியே கோவிலுக் கென்று மலரால் அர்ச்சனை செய்தார். பிறகு தாம் கொண்டுவந்த நிவேதனத்தை முன் வைத்தார். "எம்பெருமானே, இதனை உண்டருளல் வேண்டும்" என்றார். கோயிலில் உள்ள மூர்த்திகள் நிவேதனப் பொருள்களை உண்பது என்பது எங்கும் இல்லாதகாரியம். ஆகவே பொல்லாப் பிள்ளையார் கல்லுப் பிள்ளையாராகவே இருந்தார். அதைக் கண்டு சிறுவருக்கு வருத்தம் உண்டாயிற்று. பிள்ளையார் நிவேதனத்தை உண்பார் என்று அவர் நம்பி இருந்தார். "சுவாமி, நீ இதை உண்ணுவிட்டால் நாளைக்கு என் தந்தையார் வந்து கோபிப்பாரே. அவர் கோபத்திற்கு ஆளாவதைவிட உன்மீது மோதிக் கொண்டு நான் நான் உயிர் விடுவேன்" என்று சொல்லி அழுதார், திருவுளம் இறங்கிய விநாயகர் முன் இருந்த நிவேதனத்தை எடுத்துச் சாப்பிட்டார்.

வீட்டிற்டிப் போன இளைஞரை "நிவேதனம் பண்ணின பிரசாதம் எங்கே?" என்று தாய் கேட்டாள். "விநாயகர் உண்டு விட்டார்" என்று அவர் சொன்னார். "விநா யகராவது உண்ணுவதாவது; என்னடா கதையளக்கிறயா? என்று தாய் மிரட்ட, அவர் மீண்டும் மீண்டும் அதையே சொன்னார். மறுநாள் உண்மை அறிந்து விடலாம் என்று எண்ணிய தாய் நிவேதனத்தையும் பூஜைக்குரிய வேறு பொருள்களையும் அவரிடம் கொடுத்தனுப்பிவிட்டுத் தானும் பின்தொடர்ந்து சென்றாள்.

என்ன ஆச்சரியம்! விநாயகர் அன்றும் நிவேதனத்தைத் துதிக்கையை நீட்டி எடுத்து உண்டார். அது முதல் நம்பியாண்டார் நம்பியாகிய அந்த இளைஞரே பூஜை செய்து வந்தார்.

இந்த அதிசயத்தைக் கேட்ட மக்கள் பலப்பல நிவேதனப் பொருள்களைக் கொண்டு வந்து தந்தார்கள். எல்லாவற்றையும் விநாயகப் பெருமான் அமுது செய்தருளினார்.

நம்பியாண்டார் 'நம்பிகள் விநாயகப் பெருமானிடம் கல்வி கற்கத் தொடங்கினார்.

இந்த அதிசயத்தைக் கேள்வியுற்ற சோழ மன்னனாகிய இராஜராஜன் தான் பல காலமாகக் கொண்டிருந்த ஒரு குறையை ஆனைமுகப் பெருமான் திருவருளால் போக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தார். அக்காலத்தில் தேவாரப் பாடல்கள் முழுமையும் கிடைக்கவில்லை. யாரோ சிலர் சில பாடல்களை மட்டும் சொல்லி வந்தார்கள். அவற்றைக் கேட்ட இராஜராஜன் தேவாரம் முழுவதையும் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டான். அவை எங்கே இருக்கின்றன என்று தெரியவில்லை. விநாயகருடைய அருளால் நம்பி யாண்டார் நம்பி அற்புதச் செயல்களைச் செய்கிறார் என்று கேள்வியுற்ற மன்னன் அவர் மூலமாக தன்னுடைய ஆவலை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான். வண்டி வண்டியாக நிவேதனப் பொருள்களைக் கொண்டு வரச்செய்து திருநாறையூரை அடைந்தான். நம்பியாண்டார் நம்பியை வணங்கி, "இவற்றை விநாயகப் பெருமானுக்கு நிவேதனம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். நம்பியாண்டார் நம்பிகளின் வேண்டுகோளின்படி அவ்வளவையும் அமுது செய்தருளினார் விநாயகர்.

இராஜராஜன் நம்பிகளை மீண்டும் வணங்கித் தன்னுடைய குறைகளை எடுத்துச் சொல்லி அதைப் போக்க வேண்டும் என்று வேண்டினான். நம்பியாண்டார் நம்பி விநா

Koviloor Digital Library

யகப் பெருமானிடம் சோழ மன்னனுடைய குறையை விண்ணப்பிக்க, அப்பெருமான் அசரீரியாக "சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலில் உள்ள இடத்தில் இன்ன இடத்தில் அகழ்ந்து பார்த்தால் கிடைக்கும்" என்று அருளினர்.

மன்னன் மகிழ்ந்து நம்பியாண்டார் நம்பிகளையும் உடன் அழைத்துக் கொண்டு சிதம்பரம சென்று திருக்கோயிலை அடைந்து, குறிப்பிட்ட இடத்தை அகழ எண்ணினான். திருக்கோயிலில் இருந்த தீட்சிதர்கள் மன்னனைத் தடைசெய்து, வைத்தவர்கள் வந்தால் தான் எடுக்கலாம்" என்றார்கள், உடனே மன்னன் நால்வர்களுடைய திருமேனிகளை அங்கே எழுந்தருளச் செய்வித்து. "இதோ வந்து விட்டார்கள் என்று காட்டினான். பிறகு அவர்கள் உடம்பாட்டின்மேல் அந்த இடத்தை அகழ்ந்து பார்த்தபோது ஒரு கரையான் புற்று, சுவடிகளை மூடிக் கொண்டிருப்பதைக் கண்டான். குடங்குடமாக நெய்யைக் கொண்டுவந்து அதன்மேல் ஊற்றி, புற்றுமண் கரைந்து சுவடிகள் வெளிப்பட்டன. பல பகுதிகள் கரையானுக்கு இரையாகி விட்டதை உணர்ந்து மன்னனும் பிறரும் மிக வருந்தினர்கள். அப்பொழுது வானிலிருந்து, "இற்றைக்கு வேண்டுவன வைத்தோம்" என்ற ஒலி எழுந்தது.

அதன் பின்னர் கிடைத்த சுவடிகளை எல்லாம் கொண்டுவந்து, தூய்மை செய்து நம்பியாண்டார நம்பிகளைக் கொண்டு திருமுறைகளை வகுத்து அமைக்கச் சொன்னான் அரசன். அதுமுதல் தேவாரம் முதலிய திருமுறைகள் தமிழ்நாட்டில் எங்கும் பரவலாயின.

இப்படி விநாயகப் பெருமானின் திருவருளினால் நம்பியாண்டார் நம்பிகள் சைவத் திருமுறைகளைக் கண்டுபிடித்து வெளியிட முடிந்தது] ஞான வள்ளலாகிய கணபதி மெய்ஞ்ஞானத்தையும் நல்குவார்; கல்வி ஞானத்தையும் வழங்குவார்.

முருகப் பெருமான் வள்ளிநாயகியைத் திருமணம் செய்து கொள்ளும் முன்பு யானையாக எழுந்தருளி அனுக்கிரகம் செய்தார் கணபதி.

"அச்சிறு முருகனை அக்குறமகளுடன் அக்கண மணம் அருள் பெருமானே" என்று அருணகிரியார் பாடுவார், வள்ளித் திருக்கல்யாணத்தை நிறைவேற்றிய விநாயகர் நியாயமான முறையில் வேண்டுபவர்களுக்கு விவாகத்தையும் முடித்து வைப்பார்.

Koviloor Digital Library

பிள்ளையார் பிறப்பு

பிள்ளையார் எப்படிப் பிறந்தார்?

பிள்ளையார் பிறப்பைப் பற்றி ஆராய்வதற்கு முன் இறைவன் பிறப்பையும் அறிந்து கொள்ளுதல் அவசியம். அப்பன் பிறப்பைப் போலத்தானே இருக்கும் மகன் பிறப்பும். குமரன் இயல்பைக் கூறவந்த நகைச்சுவைக் கவிஞர் காளமேகனுரும் 1கேரத்திரத்துக் குணங்களோ கூறுவதைப் பாருங்கள். அதுபோலத்தான் பிள்ளையார் பிறப்புப் பற்றியும் இருக்கும். பொதுவாகப் பிறந்தல் என்பது நித்தியமாகிய உயிர் செய்தவினைக்குத் தக உடலோடுகூடி உலகில் தோன்றுதல். கடவுட் பிறப்பு இத்தகையதன்று.

ஒளியுருவில் உள்ள எழுத்து எளிதில் எங்கும் யாரும் அறிந்து கொள்ள வரிவடிவ மைதல்போல. அறிவுருவாக அன்பரகத்தாமரையில் அவரவர் பரிபாகவிசேடத்திற்குத் தக்க காட்சி வழங்கும் இறைவன். உருமேனியைத் தாங்குகிறர். அவர்கொள்ளும் மேனி நம்மேனிபோல மாயையின் காரியமன்று. உயிர்மேல்வைத்த கருணையால் அவரே தாங்கிக் கொண்டவை. அவ்வுருவால் அவரியற்றுந் தொழில்கள் யாவும் உயிர்களாகிய நமக்காகவே. ஆதலால் அவருரு உலகினுக்கடந்தது. உலகெலாம் அவர்வடிவு. உலகிற் கெல்லாம் அவரே உயிர். இங்ஙனமாகிய அவர் திருமேனி நமது கருமேனி கழிக்கவந்த கருணையின்வடிவு 2 இங்ஙனமாக, சமயத்துறைத்தும்—தங்கள் அறிவுத்துறைக்கும் ஏணி யிட்டு இயைபு காட்டும் நுண்ணறிவாளர் சிலர் உண்மை கூறுவார்போல இறைவன் வடிவெல்லாம் என்ன? நம் கற்பனையால் படைத்திட்டுக் கொண்டவைதாமே!' என்பர்.

நம் கற்பனை, கண்டதைக்கொண்டு, அறிந்த ஆற்றலை அதனிடத்து அமைந்த தாகக் கருதச் செய்யுமேயன்றிக் கடந்த நிலையை அதனிடத்துக் கற்பிக்கச் செய்யாது; ஆற்றின்மையான், அம்மட்டோ! நம் அறிவுக்கு எட்டாத அதிகமான பயனையும் அளியாது இதனுலேயே; இறைவன் தானே கொள்ளுந் திருமேனியன். ஆதலின் 3 "வேண்டத்தக்கது அறிவோய் நீ" என்றும். நாம் வேண்டத்தகுவனவற்றை அவரறிந்து நமக்கு அறிவிக்க நாம் அறிந்து வேண்டுவோமாயின் முழுதும் தருவர் ஆதலின் 4"வேண்ட முழுதும் தருவோய் நீ" என்றும் போற்றுகிறர் மாணிக்கவாசகர்.

இவ்வண்ணம், அருளே காரணமாக அவர் கொள்ளுந் திருமேனி எப்படிப் பிறந் தது? எப்போது பிறந்தது என்று ஆய்தல் முடியுமா? இவர் தந்தைநிலை இப்படியாக இவர் நிலையும் அத்தகையதுதானே.

1 தனிப்பாடல் 'அப்பன் இரந்துண்ணி' 2 சித்தியார், சபக். சூ. 1.பா. 55
3, 4 திருவாசகம். பா. 499

Koviloor Digital Library

சிவகுடும்பம்:

சிவன் பெரிய குடித்தனக்காரர்போலிருக்கிறதே. அவருக்கு மலையரசன் மகன் மனைவி. பிள்ளைகளோ நாலுபேர். அவர்களில் இருவர் மிக விளக்கம் அடைந்தவர்கள். ஒருவர் விநாயகர். மற்றவர் முருகன். இந்தப்பிள்ளைகளைப் பெற்றும் சிவன் பிரமசாரியாம். உமை கன்னியாம். இது எப்படி'? என்று வினவலாம். மகன் என்றது, உலகியலில் ஒரு தந்தைக்குத் தாயிடத்து ஒருயிர் மகவாகப் பிறத்தல் போன்றதன்று சிவ குடும்பத்தில் உள்ள தந்தை மகன்முறை. தேவர்களுக்கிய உயிர்கள், செய்த தீவினையைச் சூரபன்மன் ஆட்சியென்னும் துன்பத்தால் நுகர்ந்து கழித்தபிறகு, அவர்களைக் காப்பாற்ற—துன்பக் காரணனுகிய அவனைத் தொலைக்கத் தானே ஆறுமுகந்தாங்கி, தன்னுற்றலாகிய ஆறு பொறிகளை உண்டாக்கினர். அவை உருவாயின. ஓடின, ஆடின. உமையம்மை ஒன்று கூட்டக் கந்தனுயினர், தேவர் தலைவராயினர். இதனுல் இறைவனின் வேறல்லன் முருகன். அது போலவே பிள்ளையாரும் தன்னின் வேருகாத தனது ஆற்றலை அதுவும் ஒளியின் வன்மையைத் தன்னின் வேருக்கித் தந்தார். அதுவே உலகப் படைப்பின் மூதல் தோற்றம். இதனை 'ஓங்காரத்தில் விளங்கும் முதல்வன் படைப்புக்கு முந்திய தோற்றமுடையனுய், விந்து நாதச் சேர்க்கையால் விளைந்த முதலோசையில் முளைந்து நிற்பவனுதலின் அவன் விந்துநாதங்களை இயக்கி நிற்கும் அம்மையப்பருக்கு மூத்த பிள்ளை போல்வன்' என்ற மறைமலையடிகளின் எழுத்தும் நன்கு விளக்கும்.1

இங்ஙனம் உள்ள உண்மை நிலையை அறிந்துகொள்ளும் அறிவாற்றலை இயற்கையே பெற்றிருந்தும் தம்மவரிற் சிலர், பிள்ளையார் மகனுனதைப் பற்றி என்னென்னவோ கூற, தமது பண்பாட்டை எழுத்து மூலமாகப் பயின்ற மேலைநாட்டறிஞர் ஒருவர்2 'பரம்பொருள் தனக்குள்ளேதானே, ஆற்றலை அதாவது ஞானசக்தியை உலகம் தொழிற்படுவதற்காகப் படைத்துக் கொண்டது. அம்முதற் படைப்பு வாக்கு. அதன் முதல்நிலை பிரணவம். அது பெற்ற காட்சியுரு கணபதி வடிவம்' என்று எழுதுகிறார். இவர் தம் கருத்துக்குத் துணையாக, 'தேவர்கள் பிறப்பதற்கு முன்பே பிரமத்தினின்றும் வாக்குத் தோன்றியது; அதன் முதனிலையே பிரணவம்' என்ற 3 கடோபநிஷத்தைக் கையாளுகிறார். இவ்வண்ணம், சிவகுடும்பம் வாக்கு வடிவாக ஒரு பிள்ளையும், ஆற்றல் வடிவாக ஒரு பிள்ளையுமாக விளைந்தது.

உண்மை இவ்வாருக, பிள்ளையார் எங்கே பிறந்தார்? எப்படிப் பிறந்தார்? என்ற ஆராய்ச்சி எங்கும் தலை முட்டி நிற்கிறது. எல்லோர்க்கும் இதில். பிடித்தமாகச் சிலவற்றைத் தெரிவித்துவிட்டு நன்மதிப்பைப் பெறுவாரும் சிலர் உளர். இவர்கள் முடிவையே முடிவாகக் கொண்டு, நாட்டின் அறியாமையை விரட்டிவிட்டதாக எண்ணும் அறிவுதயங்கள் சில. புராணங்கள் யாவும் பொய் என்பவர்களும் பிள்ளையார் பிறப்பைப்பற்றி ஆராய, புராண வரலாறுகளையே ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். ஆதலால், பிள்ளையார் பிறப்பைப்பற்றிய உண்மையைக் காண புராணங்களைப் பற்றிய சில பொதுக் கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

---

1 'மாணிக்கவாசகர் காலம்' பக் 279.

2 Tamil culture Vol III. No, 2 Page 154-155, Reverend, H. Herass, S-J

3 கடோபநிஷத் II. 4-5.

Koviloor Digital Library

புராணங்கள் கவிதைகளின் வாயிலாக மக்களைச் சிவ வழிபாட்டிற் செலுத்தும் கருவிகள். இறைவனுடைய பொதுவியல்பு, சிறப்பியல்புகளைச் சாத்திர வாயிலாக நுண்ணிதின் அறிந்து கொள்ளும் ஆற்றலில்லாத மக்களைத் தெளிவிப்பதற்காக இயற்றப் பட்ட சாதனங்கள். இவற்றின் வாயிலாக அறிந்து கொள்ள வேண்டிய தத்துவக் கருத் துக்களை விடுத்து, கரும்பிருக்க இரும்பு கடித்து இன்பத்தவர்களைப்போல, கனியிருப்பக் காய்தின்று வாய் புளித்தவர்களைப்போல, கருப்பஞ்சாற்றை ஒழுகவிட்டுச் சக்கையைச் சுவைத்து அலுத்தவர்களைப்போல, புராணவரலாறுகளை, இறையியல்புகளைக் குறைக்கும் கருவிகளாகக் கொண்டனர் பலர். எடுத்துக்காட்டாக, உயிர்கள் இன்பதிலே எய்துதற்கு மும்மலங்கள் தடையாகவுள்ளன. அம்மலங்கள் மூன்றும் தன்மையாலும் வன்மையாலும் பொன் வெள்ளி இரும்பு மூன்றுமெயென்ற கோட்டைகள். அவற்றை ஒரு சேர இறைவன் சிரித்து எரித்து, உயிர்களை உய்யக் கொள்கிறார்.1 அங்ஙனம் உய்ந்தவர்களை தம் அணுக் கத் தொண்டராகவும், அன்பராகவும் அமைத்துக் கொள்கிறார்2 என்ற உண்மையை உணர்த்த, முப்புரங்களிருந்தன; அவை பறக்குந்தன்மையன; ஊர்ஊராக அழுக்கிவிடும் ஆற்றல் உடையன; அவற்றை இறைவன் சிரித்து எரித்தார் என்ற வரலாறுகூறுகின்றன புராணங்கள். 3பரிபாடல் முதலிய சங்க நூல்களும் இவ்வரலாற்றை இப்படியே ஓதுகின் றன. இதனைவிட்டு எங்கேயாவது கோட்டை பறக்குமா? அவற்றைச் சிரித்து எரித்தார் என்பது எப்படி அறிவுக்குப் பொருத்தும்? என்று வினவுவதா ஏற்புடையது.

அவ்வண்ணமே, விநாயகப் பெருமான் தோற்றத்தையும் விளக்க, பல புராணங்கள் பல வரலாறுகளைப் பகர்ந்தன. புராணங்களிற் சில சைவ புராணங்கள், சில வைணவ புராணங்கள், சில அங்கி, சூரியன் இவர்களைப் பற்றியன. இங்ஙனம் சமயச்சார்புடைய புராணங்கள், வரலாற்றைப் பலவிதமாகக் கூறுதல் இயல்பு. அன்றியும் கேட்கும் பக்கு வர்களுக்கு ஏற்பவும் அவர்கள் சூழ்நிலை—வாழ்வியல்களுக்கு ஏற்பவும் வரலாறுகளை வகுக்கும் பொறுப்பு புராணங்களுக்கு அமைவதாயிற்று. அதனாலும் வரலாறுகள் பல திறப்படுவன ஆயின. அவற்றையெல்லாம் கிடைத்தவரை தொகுத்து எழுதுவாம்.

சிவபுராணம் :

ஒருக்கால், உலக மாதாவாகிய உமாதேவி, ஒரு பிள்ளையைப் பெற்றுத் தாமும் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்று எண்ணினார். மண்ணால் உருச் சமைத்தார். உயிர் கொடுத்தார். தன் மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் எல்லாத் தேவர்களுக்கும் அறிவித்துப் புதல்வர்ப்பேற்றைக் கொண் டாடத் திருவுளம் பற்றினார். தூது போக்கினார். தேவர்கள் அனைவரும் திருக்கயிலை

---

1 "அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே."—திருமந்திரம் பா-343

2 "மூவெயில் செற்றஞான்று உய்ந்த மூவரில் இருவர் நின் திருக்கோயிலின் வாய்தல்
காவலாளர்என் றேவியபின்னை ஒருவ நீ கரிகாடரங்காக
மானநோக்கியோர் மாநடமகிழ மணிமுழாமுழக்க அருள்செய்த
தேவதேவ நின்திருவடியடைந்தேன் செழும்பொழில் திருப்புன்கூருளானே"
—சுந்தரர், திருப்புன்கூர்-8

3 பரிபாடல் 5: 22-26 புறம் 55

Koviloor Digital Library

வந்தனர். அவர்களோடு சனியனும் வந்தான். அவன் பார்வை அந்த அழகிய குழந்தை யின்மேல் விழுந்தது. அதனால் அதன் தலை அறுபட்டுப்போயிற்று. அற்ற தலையும் மறைந்தது. அம்மை வருந்தினர். வருங்காலக் குறிப்புணர்ந்த வள்ளல் சிவபெருமான் பூதகணங்களைப் பார்த்து இவ்வனத்தில் வடக்கே தலைவைத்துறங்கும் விலங்கொன்றின் தலையையாவது கொணர்க என்று ஆணைதந்தனர். அவர்களும் அங்ஙனமே சென்று ஓர் யானைத் தலையைக் கொணர்ந்தார்கள். சிவபெருமான் அதனைப் பொருத்திக் குழந் தையை உயிர்ப்பித்துக் கொடுத்தனர். திருவுளக் குறிப்பறிந்த உமையம்மை உள்ளம் மகிழ்ந்தார். இறைவன் யானைமுகப் புதல்வரைக் கணநாதராக்கினர்.

மத்ஸ்யபுராணம் :

உமாதேவியார் தன் தோழியரான ஜயை விஜயைகளுடன் அந்தப்புரத்திலுள்ள திருமஞ்சன அறைக்கு நீராடச் சென்றனர். அப்போது ஜயை என்பாள் 'சிவகணத்தவர் களான நந்திபிருங்கிகளைத்தானே, யாமும் காவலாக வைத்திருக்கிறோம்; நமக்கென்று தனியாகப் பெருமாட்டி ஏன் படைத்து வைத்துக்கொள்ளக்கூடாது' என்று வேண்டிக் கொண்டாள். உமையம்மை தன் திருமேனியின் அழுக்கை உருட்டி உருவாக்கி உயிர் கொடுத்துக் காவல் வைத்துச்சென்றனர். அக்கை சிவபெருமான் உமையம்மையாரைக் காண உள்ளே வந்தார். புதுக்காவலன் தடுத்தான், முடிவில் தாமறியா அவன் தலையை பரசினால் வெட்டினர். செய்தியறிந்த பிராட்டி வருந்தினர். சிவபெருமான் யானைத் தலை யைப் பொருத்தி உயிர்ப்பித்தனர்.

சுப்பிரபேதம் :

உமையும் சிவபிரானும் உய்யாவனத்திற்குச் சென்றனர். அங்கே பிடியுங் களிறும் தம்முட் கலந்து நின்றன. அவற்றைக் கண்ட இவர்களும் பிடியுங் களிறும் ஆயினர். பிள்ளையார் பிறந்தார். இந்த வரலாறு திருஞானசம்பந்த சுவாமிகளது 'பந்தத்தால்' என்னும் கழுமலப்பதிகத்திலும் 'பிடியதனுரு' என்ற வலிவலம் திருப்பாடலிலும் குறிக்கப் பெறுகின்றது.

(விக்னேகர பிரதிஷ்டாவிதி சுலோகம் 1-6)

காஞ்சிப்புராணம் :

சிவபெருமானும் உமாதேவியும் உய்யானம் சென்றனர். அங்கே உள்ள 'மந்திர சாலா' என்ற மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. இருவரும் அதனையே உற்று நோக்கினர். சமஷ்டிப் பிரணவமாகிய அது பிரிந்து, இறைவன் எழுத்தாகிய அகரம் களிருகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும் ஆயிற்று அவை இரண் டும் கூடின. விநாயகர் தோன்றினர்.

கந்தபுராணம் :

உய்யானத்திருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம் பிடியும் களிறுமாகப் புணர்ந்தன. விநாயகர் அவதரித்தார்.

"அக்கணத் தாயிடை ஐங்கரத் தவன்அருள்
முககளுல் வாயினுன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனேர் சிறுவன்வந் தருளினுன்"

(கயமுகன் உற்பத்திப் படலம்)

Koviloor Digital Library

விநாயக புராணம் :

பரசிவம் உலகைப் புனருத்பத்தி செய்யத் திருவுள்ளங்கொண்டு விநாயகராக உருவுகொண்டனர். முக்குணங்களையும் பிரம விஷ்ணு ருத்திரர்களாகப் படைத்தனர். அவர்கள் மூவரும் தத்தம் தொழில் கைவர வேண்டும் என்று விநாயகரை நோக்கித் தவஞ்செய்தனர். முன்போலவே விநாயகர் காட்சி வழங்கினர். முத்தொழிலாற்றலையும் அவரவர்களுக்கு அளித்தனர்.

(மூவர் உபாசித்த படலம்)

கபிலர் அரிய தவஞ்செய்து பெற்ற சிந்தாமணியைக் கனன் என்னும் அரசன் கவர்ந்து கொண்டான். அதனைத் திரும்பப் பெறுவதற்குப் பெரிதும் தவஞ்செய்தனர். அவருடைய தவ அனல் அகிலத்துலகையும் பொசுக்கிற்று. விஷ்ணுவின் மாயையாகிய சாருவாசினி வெளிப்பட்டு 'இழந்த பொருளைத் திரும்பப்பெற்று உன் கவலை தீரவேண்டு மானால் விநாயகரை நோக்கித் தவஞ்செய்க; சிவனே விநாயகர் என்று கூறி மறைந்தனள். கபிலர் அவ்வண்ணமே தவஞ் செய்ய விநாயகர் தோன்றினர்.

(சிந்தாமணி விநாயகர் அவதாரப் படலம்)

பாரசுவ் முனிவர்க்கும் அவர் மனைவிக்கும் திருக்குமாரராகத் தானே குழந்தையாக மடுக்கரையில் தோன்றினர். முனிவரும் பன்னியரும் எடுத்து வளர்த்தனர். தங்கள் தவச்சிறப்பை அறிந்து மகிழ்ந்தனர்.

(விக்னராசர் அவதாரம்)

கமலாசுரன் என்பவன் வேதங்களைத் திருடிக் கடலில்போய் ஒளிந்துக்கொண்டான். அதனைப் பெறுவதற்காகப் பிரமன் பன்னாள் தவஞ் செய்தான். விநாயகர் பத்துக்கைகளோடும், யானை முகத்தோடும் தோன்றி அவனை அடக்கி வேதங்களை மீட்டுக் கொடுத்தனர். மல்லாளன் என்னும் அந்தணச் சிறுவனுகவும் தோன்றி வேதங்களைப் பயிற்றுவித்தனர்

(மயூரேசர் அவதாரப் படலம்)

உமாதேவியார் சிவபெருமானிடம் விநாயக மந்திரமாகிய ஏகாக்ஷர மந்திரத்தைக் உபதேசங் கேட்டார். கணபதியை உபாசித்து வந்தனர். விநாயகர் ஆறு கரங்களோடும் ஆனை முகத்தோடும் வெண்ணிறமான குழந்தையாகப் பாலசந்திர விநாயகர் என்னும் திருநாமத்துடன் உமாதேவிக்கு மகனுகத் தோன்றினர். அங்ஙனம் அவர் அவதரித்த நாள் ஆவணி மாசத்துப் பூர்வபட்ச சதுர்த்தியும் விசாக நட்சத்திரம் கூடிய சோம வாரத்தில் சிங்க லக்னமாகும்.

இவ்வண்ணம் விநாயகர் பிறப்பைப் பற்றிய வரலாறுகள் பலவுள்ளன. இவற்றுட் சில வரலாறுகள், விநாயகர் சிவனேயென்பதைத் தெரிவிப்பன, சில வரலாறுகள் அன்பர்களுக்கு அருள் வழங்க அவரவர்கள் தியானித்த வண்ணம் விநாயகர் தோன்றிய நிலையையே அறிவிப்பன.

இங்ஙனம் பலபடக் கூறுவானேன் :

ஆன்மாக்களாகிய நம்மைப்போல ஒரு தாய் வயிற்றிலே ஒரு காலத்து, குறிப்பிட்ட அங்க அடையாளங்கோடு பிறந்திருப்பின், குறிப்பிட்டு இதுதான் விநாயகர் பிறப்பு; இன்ன ஆண்டிற் பிறந்தார்; இத்தனையடி உயரம்; இவ்வளவு பருமன்; இவ்வளவு எடையிருந்தார் என்று கூற இயலும், அங்ஙனமின்றி, அவரவர்களும் தத்தமக்குப்

Koviloor Digital Library

புலனுனவரை கூறினர். இது ஒன்றே இறைவன் பிறப்பு இல்லாதவன்: பிறந்தார் எனப் படுதல் உபசார வழக்கு: திருமேனிகொண்டு எழுந்தருளியதை அறிவார். யாரும் இல்லை ஏன்பதைக் காட்டும் சிறந்த சான்றுகும்: இங்ஙனம் கூறப்படும் கதைகள் பலவும், விநாயகர் திருமேனி, தாமே மேற்கொள்ளப்பெற்ற—மாயாகாரியமல்லாத—ஞானமேயான—நம்முடைய கருமேனி கழிக்க வந்தது என்பதை விளக்கும். இதனை உமாபதி சிவம் 'ஒளியான திருமேனி' என்று அருளிற்று. உண்மை இவ்வாருகச் சமயம் பழுத்த தமிழர்களிற் சிலரும், ஏனையோரும் 'அழுக்குருண்டை' 'விலங்குப் பிள்ளை' என்றெல்லாம் கூறி வருகின்றனர். Dr. H. Herass S.J. போன்ற புறச்சமயத்தவர்களும் தத்துவமறிந்து போற்ற, இவர்கள் மட்டும் தூற்றக் காரணம் என்ன? அறிந்து உய்யும் புண்ணியஞ் செய்யாக்குறையே!

பிறப்பு வரலாறுகளின் உண்மை :

உலகப் பொருள்களின் இயல்பை விளக்கப் புகுந்த ஆசிரியர் மலையைக் காட்டி—பாறையைக் காட்டி—கல்லைக் காட்டி—அணுவைக் காட்டி—பரமாணுவைக் காட்டுவது போல—நாம் கோயில்களிற் காணும் பிள்ளையார் சகண்டருத்திரகுமார விநாயகராகப் பிரகிருதிபுவனவாசிகளாகிய நம் போன்ற சகலாதியான்மாக்களுக்கு அருள்வழங்குபவர். இவரை அதிட்டித்து நிற்பவர் சுத்தவித்யாதத்வத்திலுள்ள விநாயகர். இவர் சுத்த வித்யா புவனவாசிகளுக்கு அருள் வழங்கி, ஈசுரதத்வத்திலுள்ள விநாயகரால் அதிட்டிக்கப்பெறுவர். ஈசுரதத்துவபுவனவாசிகளுக்கு அருள் வழங்கும் விநாயகர் பரநாதவடிவினராகப் பரசிவத்தின் வேருகாதவராக இருப்பவர். இந்நிலைகள் யாவும் அவனருளே கண்ணுகக் காணவேண்டிய அநுபவத் திறங்கள், இவ்வண்ணம் அறிவினுக்கறிவாகி விளங்கும் விநாயகர் பிறந்தார் என்பதும் சில உண்மைகளை விளக்கிநிற்றல் தெளிவு.

சிவனும் பார்வதியுங்கூடிப் பிள்ளையாரைப் பெற்றனர் என்பது அகார உகாரங்களாகிய சிவமும் சக்தியுங்கூடியே சுத்தமாயாகாரியமாகிய நாதப் பிரணவமாயிற்று என்பதை விளக்க எழுந்ததாம். அதற்குமேல் சக்தி உன்முகமான பரசிவம் பரநாதப் பிரணவத்தை ஈன்றது என்பதும் அங்ஙனம் உபசாரமே. இந்நுணுக்கத்தை எங்ஙனம் அனுபவருக்கும் உணர்த்த இயலும். மலையைக்காட்டி விளக்கும் உலகியல் ஆசிரியரைப் போலவே புராண ஆசிரியர்கள் சிவனும் பார்வதியும் நடைமலையாகிய ஆனையும் பிடியும் ஆயினர், விநாயகர் பிறந்தார் என்றனர். அரசன் நாட்டில் எதனையும் செய்யலாமாயினும் ஊர் காவலையும்—கள்ளனைக் கண்டுபிடித்தலையும் வீரனைக்கொண்டே இயற்றல் நேர்மையாதல்போல ஆக்கலாதி ஐந்தொழிலையும் ஒரு சேர ஒரேகாலத்து ஆற்றும் வன்மை இறைவர்க்கு உளதாயினும் பிரமனுதியரைக் கொண்டே இயற்றுவிப்பர். அதிலும் சிருட்டி முதலானவற்றிற்கு முதற்காரணமான மாயையைக்கொண்டே இயற்றுவர். ஆதலால் இறைவனது நீங்காத வன்மையாகிய பராசக்தி தன் அழுக்கைக் கொண்டு உருவாக்கினுள்; மண்ணைக்கொண்டு உருவாக்கினுள் என்றது (அழுக்கு1-மாயை. மண்2

1 சித்தியார் சூ-2, பா-52 2 சித்தியார் சூ-1 பா-13.

Koviloor Digital Library

மாயை) மாயைக்கொண்டு முதற்படைப்பைத் தொடங்கினுள் என்பதாகும். 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தற்கு விகாயாட்டு' என்ருற்போல, சிருட்டியாதி தொழில்களும் இறைவற்கு ஓர் விகாயாட்டு. மூட்டை நாக்கலால் வேர்த்தல். இகாத்தல் முதலிய விகாரங்களும் பிறவும் நமக்குண்டாதல்போல, படைத்தலாதி தொழிலியற்றலால் இறைவன் விகாரியாகான் என்பதை உணர்த்தவே மண்ணுலே பொம்மைசெய்து உயிர்கொடுத்து வைத்துக்கொண்டு உமைவிகாயாடினுள் என்றது. மேலும் ஒன்ருத இரண்டை (தேவ உடகையும் - விலங்குத்தலையையும்) ஒன்றவைத்தார் என்பது இறைவனுடைய (எல்லாம் வல்ல தன்மைக்கு) அளவிலாற்றலுக்கு அமைந்த எடுத்துக்காட்டு. அம்மையின் காவலகை வெட்டிக் கொன்ருர்; தலைகொடுத்துக் காத்தார் என்பது 'ஆக்கலும் அழித்தல் தானும் அவனருட் செயலேயாகும்' என்பதைக் காட்டுகிறது.

ஆலய விளக்கு

ஆலயத்தில் விளக்கேற்றி இறைவகை வழிபடுவார்க்கு மெய்ஞ்ஞானம் உண்டாகும். அகைந்து போகுந் தருணத்தில், தன் வால்பட்டுத் தூண்டிக் கொண்ட புண்ணியத்தினுல், எலி, பலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்பது வரலாறு. இறைவகை திருவிளக்கில் ஆவாஹனம் செய்து வழிபடுகின்ற விதி நமது சாஸ்திரங்களில் உண்டு. ஆகவேதான் இறைவகை அருணகிரிநாதர் ''தீப மங்கள ஜோதீ நமோ நம'' என்று துதிக்கின்ருர்.

Koviloor Digital Library

பிள்ளையார் ஆயுதங்கள்

காலதேவன் நமது வாழ்க்கைப் பாதையைப் பலவேறு வழிகளில், பலநாட்டு மக்களுடைய கூட்டுறவைக் கொண்டு கணந்தோறும் மாற்றி அமைக்கின்றான். அதனால் நமது அகவாழ்வு புறவாழ்வு இரண்டுமே மாறுகின்றன. நமது பண்டைய வாழ்வியலின் துணைப்பொருள்களான பாத்திரபண்டங்களும், போர்க் கருவிகளும் இன்று வேற்றுருவத்தில் வேறு வேறு பெயர் தாங்கி நிற்கின்றன. சில மறைந்தே போயின. சில பெயர் மட்டும் மறைந்து போயின. ஆதலால் அவற்றைப்பற்றி இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

கருவிகள், கருவிகளாக இருந்தகாலத்திலே காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும், தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில், ஆடம்பரமும், அணியழகும் அடிவைக்கத் தொடங்கிய காலத்து, எத்தனையோ இழைப்பு வேலைகளும் கொடிக்கருக்கு வேலைகளும். சிற்பசித்திர வேலைகளும் கலந்துவிட்டன. அதனால் அவை ஆயுதங்களா? அல்லது அணியா? என்றுகூட அறியமுடியாத நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது. அவ்வண்ணமே (ஆயுதங்களே) போர்க்கருவிகளே மக்கள் கையாண்ட காலத்துக்கு கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மந்திரிகளும் கையாளுவனவற்றில், சித்திரம் கலந்தன கடவுட் கைகளில் இருப்பன, என்றும் காட்சிப் பொருள்களாகவே இருப்பதால் அவை அழகுப் பொருள்களாகவே ஆயின. ஆதலால் அவைகளின் இயற்கையமைப்பையும், இன்று கடவுளர் கரங்களில் விளங்கும் அமைப்பையும் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மற்றும், நாட்டிற்கு நாடு கருவிகளினுடைய அமைப்பு மாறியிருக்கின்றது

கல்லுக்கு உயிர்கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி, கலைத் தெய்வத்தின் கருணையை விளங்கச் செய்த பல்லவர்களில் முற்காலப் பல்லவர்கள் சாளுக்கியர்கள், இவர்கள் சிற்பங்களில் கருவிகளின் அமைப்பு நிலை வேறு. அவற்றினின்றும், பிற்காலச் சாளுக்கிய, பல்லவ, ஹொய்சள மன்னர்களின் சிற்பங்களிலுள்ள கருவிகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. அவற்றைக் கிடைத்தவரையில் கணபதி கரங்களிலுள்ள கருவி வகைகளைக் கொண்டு காட்ட முயலுவோம்.

1. பாசம் : இது கயிறு. பகைவர்கள் கையையும், கால்களையும் கட்டப் பயன்படும்; ஒருகயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்குமுடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி. நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

Koviloor Digital Library

2. அங்குசம் : இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பால் செய்யப் பெற்ற வளைந்த மூக்கும், குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக்காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக் கருவிகளில் இதுவும் ஒன்று.

3. தந்தம் : ஓடிந்த யானைக் கொம்பு.

4. வேதாளம் : தலை நாரில்லாத, அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க பூத வடிவாக இருப்பது. இதனை ஏவிப் பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீர கணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

5. சக்தி : இது வேல். ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது. முருகனுக்குச் சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறார். இது பிடித்த படியே எறியும் கருவிகளில் ஒன்று. வேல்மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் கூர்மையுடையது. 'யானையெறிந்த வேல் ஏந்தல் இனிது' என்பர் வள்ளுவரும்.

6. அம்பு (Arrow): இது வில்லை வகைத்து அதில் வைத்து எய்யப் பெறுங்கருவி. நுனி கூரிய முள் போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

7. வில் : இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிகுவென்னு மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றுனியன்ற நாண் கட்டப்பெற்றிருக்கும், வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலியும், நாணின் உறுதியும், இழுத்துவிடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்புபட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம்; அம்பின் நுனி பிறை மதிபோலக் கவரப்பட்டதாகவும் இருக்கும்; இதற்குப் பிறை அம்பு என்று பெயர்.

8 சக்கரம் : இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி, இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. இதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது, இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப்பெறுகின்றன

9. கத்தி : இது இன்று அறவே மறந்துபோன கருவி, தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி, இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவும் கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக் கத்தியாக 'பிச்சுவா' என்பாரும் உளர்.

10 கேடகம் : இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது, பலகையாலும் வலுவுள்ள காட்டெருமை, கடமை, நீர்யானை காண்டாமிருகம் இவற்றின் தோலா

Koviloor Digital Library

லுஞ்செய்யப் பெறும், சதுரம், நீளச் சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங் களிற் செய்யப்பெறும்,

11 சம்மட்டி : இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது, இதன் நடுவில் தாரினையிடப் பெற்றிருக்கும், இதில் கையிடுக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள், இதுவும் உடையடன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்,

12 கதை : குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன, பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையை விட்டு அகலாதபடி, காவலாக இருப்பது, உடையவனை பாதுகாப்பது,

13 நாகபாசம் : இதுவும் பாசவகைகளுள் ஒன்று,

14 சூலம் : இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும்.

15 குத்தாலி : இன்று வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும் இரும்பாலியன்ற கருவி இது. இதில் பல வகைகள் உள்ளன.

16 மழு : இன்று மரங்களை வெட்டப் பயன் பெறுவதாக எரியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

17 கொடி : இது வெற்றிக்கு அறிகுறியானது துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

18 தண்டம் : இது நீளமான கைத்தடி. மரத்தாலானது.

19 கமண்டலம் : நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவாதலும், திருவுருவ நிலையையை அறிந்து கொள்ள உதவும் கருவிகள்.

20 பரசு : இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செதுக்கப் பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும்.

21 கரும்புவில் : கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும்; காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.

22 சங்கம் : இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலி கேட்டதுமே ஓடுங்கி அடங்கச் செய்யும் அச்சக் கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

Koviloor Digital Library

23 புஷ்பபாணம் : தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்துபூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

24 கோடரி : மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இதும்பில், வீச்சு கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைத்துள்ளது.

25 அக்ஷமாலை : உருத்திராக்ஷ மாலை. இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஓராயுதம்போல் இருப்பதைக் காணலாம்.

26 சாமரம் : இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

27 கட்டுவாங்கம் : இது நீளமான கத்தி போரில் படைகளை வெட்டப் பயன் படுவது. இதில் ஒரு முனையுடையதும், இரு முனையுடையதும் என இருவகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.

28 தீ அகல் , ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியே தான் இருக்கும்.

29 வீணை : இது ஓர் இசைக்கருவி. போர்க் காலங்களில் தளர்ந்த படை வீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மீத்தனி வெண்கோட்டு மதமுகத்துத்—தூத்தமிழ்போல்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழலங்கை
மூக்கட் கடாயானை முன்.

—கபிலதேவநாயனார்.

Koviloor Digital Library

பிள்ளையார் வகைகள்

கடவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம், அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பலவேறு நிலைகளில், பலவேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது; ஒன்றுகிறது; உருவேற்றுகிறது; உயர்கிறது. இவ்வண்ணமாகிய இடையருத தியானம், எல்லா இன்பங்களையும் அளித்து, ஈடேற்றச் செய்கிறது. விநாயகப் பெருமானுடைய திருவுருவமும், அன்பர்களுக்காக மூப்பத்திரண்டாகப் போற்றப் பெறுகின்றது.

1 பால கணபதி :

நான்கு திருக்கரங்களும், யானை முகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.

2 தருண கணபதி :

எட்டுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன் கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவைகளையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த தி மேனி படைத்தவர்.

3 பக்தி கணபதி :

சரத்காலத்து நிறைமதிபோன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானை முகமும் உடையவராக இருப்பர்.

4 வீர கணபதி :

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினைந்தையும் தாங்கிய பதினைந்து திருக்கரங்களையும், சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

5 சத்தி கணபதி :

செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக, பச்சை நிற மேனியள்ளிய தேவியைத் தழுவிக் கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம், மூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

Koviloor Digital Library

।। भक्तिगणपति. ।।

नारिकेलाम्र कदली वरपुण्ड्रेक्षु धारिणम् ।
शरच्चन्द्राभवपुषम् भजे भक्तिगणाधिपम् ।।

।। शक्तिगणपति. ।।

आलिङ्य देवीं हरिताङ्ग यष्टिं परस्पराश्लिष्ट
कटीनिवेशम् सन्ध्याभ्रणं पाशसृणि वहन्तं
भयापहम् शक्तिगणेश मीडे ।।

।। सिद्धिगणपति ।।

पक्वचूतफल पुष्पमञ्जरीं इक्षुखण्ड
तिलमोदकैस्सह उद्वहन्परशु हस्त ते नमः ।
श्री समृद्धियुत देव पिङ्गल ।।

।। उच्छिष्टगणपति. ।।

नीलाब्जं दाडिमीं वेणु शालीं गुञ्जाक्षसूत्रकम् ।
दधदुच्छिष्टनामाय गणेशः पातु मेचकः ।।

Koviloor Digital Library

।। क्षिप्रगणपतिः ।।

दन्तकल्पलतापाश रत्नकुंभाङ्कुशोज्ज्वलम् ।
बन्धूक कमनीयाभं ध्यायेत् क्षिप्रगणाधिपम् ।।

।। ऋणमोचनगणपति. ।।

पाशांकुशौ दन्तजम्बू दधानस्फटिकप्रभः ।
रक्तांशुको गणपतिर्मुदे स्याद्ऋणमोचकः ।।

।। त्रिजयगणपतिः ।।

पाशाङ्कुश स्वदन्ताग्र फलवानाखुवाहनः ।।
विघ्नं निहन्तु नस्सर्वं रक्तवर्णो विनायकः ।।

।। डुण्डि गणपति. ।।

अक्षमालां कुठारं च रत्नपात्रं स्वदन्तकम् ।
धत्ते करैर्विघ्नराजो डुण्डिनाम मुदेऽस्तु नः ।।

Koviloor Digital Library

।। द्विमुखगणपति. ।।

स्वदन्तपाशांकुशरत्नपात्रं करैर्दधानो हरिनीलगात्रः
रक्तांशुको रत्नकिरीटमाली
भूत्यैसदा, मेद्विमुखो गणेशः ।।

।। हेरम्बगणपति ।।



अभयवरदहस्तः पाशदन्ताक्षमाली,
सृणिपरशु दधानः मुद्गरं मोदकं च ।
फलमधिगतसिंहः पञ्चमातङ्गवक्त्रः,
गणपतिरतिगौरः पातु हेरम्बनामाः ।।

।। एकदन्तगणपति. ।।

लम्बोधरं श्यामतनुं गणेशं कुठारमक्षस्रजमूर्ध्वगाभ्याम्
सलड्डुकं दन्तमथ कराभ्यां,
वामेतराभ्यां च दधानमीडे ।।

।। नृत्यगणपति. ।।

पाशाङ्कुशापूप कुठारदन्तं,
चञ्चत्करा कलुप्त वराङ्गलीकम् ।
पीतप्रभं कल्पतरोरधस्थं,
भजामि नृत्योपपदं गणेशम् ।।

Koviloor Digital Library

।। हरिद्रा गणपतिः ।।

हरिद्राभं चतुर्बाहुं हरिद्रावदनं प्रभुम् ।
पाशांङ्कुशधर देवम् मोदकं दन्तमेव च ।
भक्ताभयप्रदातारं वन्दे विघ्नविनाशनम् ।।

।। एकाक्षरगणपति. ।।

रक्तो रक्ताङ्गरागांशुककुसुमयुतस्तुन्दिलश्चन्द्रमौलि.
नेत्रैर्युक्तस्त्रिभिः बामनकरचरणो बीजपूरं दधानः ।
हस्ताग्राक्लृप्तपाशाङ्कुशरदवरदो नागवक्त्रोऽहिभूषो
देवः पद्मासनस्थो भवतु सुखकरो भूतये विघ्नराजः ।।

।। विघ्नगणपतिः ।।

शङ्खेक्षुचाप कुसुमेषु कुठार पाश चक्र स्वदन्त
सृणि मञ्जरिकाशराद्यैः पाणिश्रितैः परिसमीहित
भूषणश्रीः विघ्नेश्वरो विजयते तपनीयगौरः ।।

।। उद्दण्डगणपति. ।।

कल्हारांबुजबीजपूरकगदादन्तेक्षुबाणैस्सदा बिभ्राणो
मणिकुम्भशालिकलशो पाशं च चक्रान्वितम्
गौराङ्ग्या रुचिराऽरविन्दकरया देव्या सदा संयुतः
शोणाङ्गश्शुभमातनोतु भजतामुद्दण्डविघ्नेश्वरः ।।

Koviloor Digital Library

6 துவிஜ கணபதி :

நான்கு திருக்கரங்களிலும், முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர் சந்திரன் போல வெண்மையானவர். நான்கு முகங்களை உடையவர்.

7 சித்தி கணபதி :

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவராக விளங்குபவர்.

8 உச்சிஷ்ட கணபதி :

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீலநிறத்திருமேனி உடைவருமாக விளங்குபவர்.

வேறுவகை: பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காமமோகிதராக விளங்குபவர். நீலவர்ணம் உடையவர்.

9 விக்ன கணபதி :

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவரும், ஆபரணங்களை நிரம்பத்தரித்தவரும், பொன்மேனியருமாக விளங்குபவர்.

10 க்ஷிப்ர கணபதி :

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

1 ஏரம்ப கணபதி :

அபயம், வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

12 லட்சுமி கணபதி

எட்டுக்கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

13 மஹா கணபதி :

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறைமுடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற—தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.

Koviloor Digital Library

14 விஜய கணபதி :

பாசம், அங்குசம், தந்தம், மாமபழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

15 நிருத்த கணபதி :

